## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## பதினோராம் பத்து

### எட்டாம் திருமொழி - மாற்றமுள
### 'தேஹ சம்பந்தத்தை அறுத்துத் தந்தருள வேண்டும்'
### என்று ஆழ்வார் எம்பெருமானைப் ப்ரார்த்தித்தல்

** மாற்றம் உள * ஆகிலும் சொல்லுவன் * மக்கள்
தோற்றக் குழி * தோற்றுவிப்பாய் கொல்? என்று இன்னம் **
ஆற்றங்கரை வாழ் மரம் போல * அஞ்சுகின்றேன் *
நாற்றச் சுவை * ஊறொலி ஆகிய நம்பீ! 1

சீற்றம் உள * ஆகிலும் செப்புவன் * மக்கள்
தோற்றக் குழி * தோற்றுவிப்பாய் கொல் என்று அஞ்சி **
காற்றத்து இடைப்பட்ட * கலவர் மனம் போல *
ஆற்றத் துளங்கா நிற்பன் * ஆழி வலவா! 2

தூங்கார் பிறவிக்கள் * இன்னம் புகப் பெய்து *
வாங்காய் என்று சிந்தித்து * நான் அதற்கு அஞ்சி **
பாம்போடு ஒரு கூரையிலே * பயின்றாற் போல் *
தாங்காது உள்ளம் தள்ளும் * என் தாமரைக் கண்ணா! 3

உருவார் பிறவிக்கள் இன்னம் புகப் பெய்து *
திரிவாய் என்று சிந்தித்தி * என்று அதற்கு அஞ்சி **
இரு பாடு எரி கொள்ளியின் * உள் எறும்பே போல் *
உருகா நிற்கும் என் உள்ளம் * ஊழி முதல்வா! 4

கொள்ளக் குறையாத * இடும்பைக் குழியில் *
தள்ளி புகப் பெய்தி கொல்? * என்று அதற்கு அஞ்சி **
வெள்ளத்து இடைப்பட்ட * நரி இனம் போலே *
உள்ளம் துளங்கா நிற்பன் * ஊழி முதல்வா! 5

** படை நின்ற * பைந்தாமரையோடு * அணி நீலம்
மடை நின்று அலரும் * வயல் ஆலி மணாளா! **
இடையன் எறிந்த மரமே * ஒத்து இராமே *
அடைய அருளாய் * எனக்கு உன்தன் அருளே 6

** வேம்பின் புழு * வேம்பு அன்றி உண்ணாது * அடியேன்
நான் பின்னும் * உன் சேவடி அன்றி நயவேன் **
தேம்பல் இளந்திங்கள் * சிறை விடுத்து * ஐவாய்ப்
பாம்பின் அணைப் * பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! 7

** அணியார் பொழில் சூழ் * அரங்க நகர் அப்பா! *
துணியேன் இனி * நின் அருள் அல்லது எனக்கு **
மணியே! மணி மாணிக்கமே! * மதுசூதா! *
பணியாய் எனக்கு உய்யும் வகை * பரஞ்சோதீ! 8

** நந்தா நரகத்து அழுந்தா வகை * நாளும்
எந்தாய்! தொண்டர் ஆனவர்க்கு * இன்னருள் செய்வாய் **
சந்தோகா! தலைவனே! * தாமரைக் கண்ணா! *
அந்தோ! அடியேற்கு * அருளாய் உன் அருளே 9

** குன்றம் எடுத்து * ஆநிரை காத்தவன் தன்னை *
மன்றில் புகழ் * மங்கை மன் கலிகன்றி சொல் **
ஒன்று நின்ற ஒன்பதும் * வல்லவர் தம் மேல் *
என்றும் வினை ஆயின * சார கில்லாவே 10

**அடிவரவு:** மாற்றம் சீற்றம் உருவார் கொள்ள படை வேம்பின் அணியார் நந்தா குன்றம் நிதியினை

**திருமங்கை ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---